**கெஸ்பேவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஆகஸ்ட் 05 திகதியும் சபை தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கெஸ்பேவ நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு எதிர்வரும் காலத்திற்காக கிடைத்திருந்த வீதவரி ரூபா 3,512,864 இற்கான தொகை வருமான முற்பெறுவனவு என கணக்கீடு செய்யாமல் கடன்கொடுத் தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | ரூபா 1,045,000 தொகை எரிபொருள் வைப்புக்கள் மற்றும் ரூபா 115,920 தொகை நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் வைப்புச் செய்த தொகை முற்கொடுப்பனவு என பதிவு செய்யப்படாமல் முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | பெற வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 1,442,851 தொகை நிதிக் கூற்றுக்களில் வருமானக் கடன்பட் டோரின் கீழ் கணக்கீடு செய்யாமல் பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2018 நவம்பர் மாதத்திற்குரிய கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,529,380 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | செலுத்தும் அடிப்படையில் கிடைத் திருந்த ரூபா 24,714,000 தொகைக்கான கம்பெக்டரின் பெறுமதி வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 11 வழக்குகள் மற்றும் சபையினால் வெளித் தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்திருந்த 01 வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு, நிதிக் கூற்றுக்களில் குறிப்புகளாக சபையினால் மற்றும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் கூற்றொன்று இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 1,331,734 தொகை மிகையாகவும் ரூபா 1,178,956 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பைக் கட்டணம் ரூபா 2,655,916 தொகையாகக் காணப்பட்டதுடன் அம்மீதியில் 2015 இற்கு முன்னர் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 191,688 தொகை மற்றும் 2016 ஆண்டிற்கான நிலுவை ரூபா 235,703 தொகை காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | பெற வேண்டிய குப்பைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 ஆண்டிற்கு முன்னர் மற்றும் 2016 ஆண்டின் போது நிலுவைத் தொகை பிழையாக சிட்டையிடப் பட்டிருந்தல் என்பதால் அவற்றை பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படு கிறது என கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ii) | 2009 முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக வீதி ஒளி உதவி ரூபா 481,578 தொகை 2014, 2015 ஆண்டுகளுக்கான பிலியன்தல விளையாட்டு கழகத்திலிருந்து பெற வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 111,054 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | வீதி ஒளி உதவி மற்றும் பெற வேண்டிய மின்சாரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதி ஒளி உதவி ரூபா 481,578 தொகையில் ரூபா 254,748 தொகை பதிவளிப்பதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீதியான ரூபா 226,830 தொகை பிழையாக சிட்டை யிடப்பட்ட தொகை ஆதலால் சபையின் அங்கீகாரத்துடன் பதிவேடு களில் இருந்து பதிவழிப்பத ற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். பிலியன்தல விளையாட்டுக் கழகத்தில் இருந்து பெற வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 111,054 தொகையை செலுத்து வதற்கு விளையாட்டுக் கழகம் இணங்கியுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியளவிலும் பொது வசதிகள் நிலையத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 68,790 தொகை மற்றும் களியாட்ட வரி ரூபா 281,047 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | களியாட்ட வரி மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 44,865 தொகையை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. ரூபா 23,925 தொகை பதிவழிப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்க உள்ளது. களியாட்ட வரி ரூபா 281,047 தொகையை பதிவழிப்பதற்கு அங்கீகாரத் திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2018 ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 310,957 இற்கான தொகையில் ரூபா 229,457 தொகை அதாவது 74 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதுள்ளது. | வாடகைத் தொகையை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 206,260 தொகை பதிவழிப்பதற்காக விடயத் திற்கு பொறுப்பான அமைச்சனரின் அங்கீகாரத் திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ரூபா 86,500 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. மீதியான ரூபா 18,197 மாதாந்தம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (v) | 2007 முதல் 2018 வரை காலப்பகுதிக் கான நிலுவை முற்பண மீதியாகிய ரூபா 181,203 இற்கான தொகை மீளாய்வாண்டு வரை தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | முற்பணக் கணக்குகள் உரிய காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 12 வருடங்களை விட பழமையான கோவைகள் என்பதனால் காணாமல் போயிருந்ததுடன் அப்போது இருந்த ஊழியர்கள் இன்மையாலும் பதிவழிப் பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (vi) | வருமானக் கடன்பட்டோர் மீதியில் அடங்கியுள்ள நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 435,994,817 தொகை எனினும், அவற்றில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான நிலுவை ரூபா 274,824,817 தொகை காணப்பட்டது. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பி இருக்கவில்லை. |
| (vii) | பெற வேண்டிய ஆதனக் கடன் வட்டி மீதி ரூபா 1,681,553 தொகை எனினும் அவற்றில் 2016 மற்றும் 2017 ஆண்டு களுக்கான நிலுவை வட்டி ரூபா 869,688 தொகையாகும். | ஆதனக் கடன் வட்டி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாள ருக்கு நிதி மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 684,952,402 தொகையான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாது இருந்தது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக அட்டவணைகள் அல்லது தேவையான தகவல்கள் சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | 2019 நிதிக்கூற்றுக் களுடன் சரி செய்து சமர்ப்பிப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நி.பி. 570 மற்றும் 571 | 02 வருடங்களை மிகைத் துள்ள ரூபா 15,773,446 இற்கான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 570 மற்றும் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நி.பி. 1653 | நகர சபைக்கு சொந்தமான 03 டிரக்டர் களின் மய்லோ மீற்றர் செயற்படாமல் காணப்பட்டது. | நி.பி. 1653 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பி இருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக் கையின் பந்தி 3.1 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | 04 வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு சுதந்திரமான உத்தி யோகத்தர் ஒருவரின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை க்காக நாட்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன என அறிவிக்கின்றேன். |

(இ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்களுக்காக தனியாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 இலக் கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்களுக்காக தனியாக பதிவேடொன்று பேணுவதற்கு களஞ்சியப் பொறுப்பாள ருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

(ஈ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 16 | ஊழியர் சேமலாப நிதிய த்திற்கு குறிப்பிட்டுள்ள வாறு பங்களிப்புத் தொகை செலுத்தப் படாமையால் மிகை விதிப்பொன்றுடன் ரூபா 2,857,034 இற்கான நிலுவைத் தொகை யொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் செயற் பட வேண்டிய துடன் நி.பி.156 இன் பிரகாரம் பொறுப்புச்சொல்ல வேண்டிய நபர் களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான அறிவுரை கள் கிடைக்கப்படாமை யால் அவ்வாறு மேற் கொள்வதற்கு முடியாமல் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2008 முதல் 2012 வரையான காலப் பகுதியில் கடமை யாற்றிய 03 உத்தியோகத்தர் மீது உள்ளூராட்சித் திணைக்களத்தினால் விசாரணை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 75,226,872 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 32,970,047 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா. 000’ | 2017 மதிப்பீட்டு வருமானம் ரூபா 000’ | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 000’ | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 000’ | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 000’ |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீதவரி மற்றும் வரி | 72,735 | 87,995 | 98,113 | 44,401 | 48,160 | 39,441 | 36,123 | 21,985 |
| வாடகை | 17,462 | 18,802 | 20,672 | 3,373 | 13,750 | 19,985 | 19,410 | 2,388 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,950 | 1,293 | 1,594 | - | 4,551 | 5,004 | 5,004 | - |
| ஏனைய வருமானங்கள் | 200,907 | 160,501 | 295,875 | 466,797 | 282,965 | 284,961 | 330,555 | 232,207 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 44,401,255 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 50,000 ஐ மிகைத்துள்ள வீதவரி அலகுகள் 22 இல் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,934,526 இற்கான தொகையொன்று காணப்பட்டது. | சிட்டையிடப்பட்ட வீதவரி வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.05.31 திகதி அளவில் ரூபா 10,804,712 அறவிடப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 33,596,543 வரை குறைந்திருந்தது. நிலுவை வீதவரி மற்றும் சிட்டையிடப் பட்ட வீதவரியை சேகரிப் பதற்கு வருமானத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப் பட்ட வீதவரி ரூபா 78,934,084 தொகையாக இருந்ததுடன், அவற்றில் ஆண்டின் போது ரூபா 32,271,729 தொகை அதாவது 41 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | நிலுவை வீதவரி வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டின் போது அறவீடு செய்ய முடியாமல் போன மொத்தத் தொகை ரூபா 28,913,268.12 தொகை அதாவது 36.6% ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 21,686,827 தொகைக்கான நிலுவை வீதவரி மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 8,150,524 தொகை யினை அறவீடு செய்திருந்ததுடன், ரூபா 13,536,103 தொகை அதாவது 62.42 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதிருந்தது. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி மற்றும் சிட்டையிடப்பட்ட வீதவரியை சேகரிப்பதற்காக வருமானத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளது. |

### 2.2.3 குப்பை வரி

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2108 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 1,388,191 இற்கான குப்பை வரி நிலுவையில் மீளாய்வாண்டின் போது ரூபா 960,800 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிலுவைத் தொகை அறவீடு செய்யப்பட்ட சதவீதம் 69.21 மாத்திரமே. | நிலுவைக் குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 427,391 தொகை ஆகக் காணப்பட்ட துடன், அந்தத் தொகை 2016 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரியவையாகும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பை வரி நிலுவை ரூபா 2,655,916 தொகை ஆகும். | குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. 2019 ஆண்டு முதல் பணம் அறவிடப்பட்ட பின்னரே சேவை வழங்கள் மேற்கொள்ளப்படும். |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த கடைகளில் இருந்து 2018 ஆண்டிற்கான சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 12,656,160 தொகை எனினும், அவற்றில் ரூபா 11,402,525 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 1,253,635 தொகை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதுள்ளது. | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக கடை உரிமையாளர்களை அறிவுறுத்தி பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,383,800 இற்கான திரண்ட நிலுவைத் தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,143,995 தொகை அதாவது 48 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் பெற வேண்டிய வருமானத்தை ஆண்டின் போதே பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 1,039,665 தொகைக் கான பழைய மீன்கடை நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | சபைக்குச் சொந்தமான நீண்ட காலமாக வாடகைக்கு கொடுக்கப் பட்டிருந்த 135 ஆதனங்களில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 2,493,440 தொகை காணப்பட்டதுடன், அம் மீதியில் அடங்கியுள்ள 10 தவணைகளை விட மிகையாக 21 ஆதனங்களின் நிலுவைத் தொகை ரூபா 1,474,515 தொகையாகும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் ஆண்டிற்கான வருமானத்தை அதே காலத்தில் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், நிலுவையை குறைப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 21 ஆதனங்களில் ரூபா 1,039,665 தொகை பெறுமதியான 14 ஆதனங் களை பதிவழிப்பதற்காக அங்கீககாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பழைய மீன்கடைகள் ஆகும். மீதியான 07 கடைகளின் நிலுவைத் தொகை ரூபா 434,850 இல் ரூபா 146,650 தொகை அறவிடப்பட்டி ருந்ததுடன், தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 288,200 தொகையாகும். |
| (ஈ) | நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன், ரூபா 1,039,665 தொகையான பழைய மீன்கடை நிலுவைத் தொகையினை பதிவழிப்பதற்காக 2019 ஜனவரி 21 திகதி அமைச்சின் அங்கீகாரத் திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையும் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், எதிர்காலத்தில் ஆண்டிற்கான வாடகை வருமானம் ஆண்டின் போதே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

### 2.2.5 வருடாந்தம் டென்டர் மூலம் வாடகைக்கு கொடுக்கும் ஆதனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த டென்டர் மூலம் வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களின் 2018 ஆம் ஆண்டிற்கான சிட்டை இடப்பட்டவை ரூபா 6,052,103 தொகை எனினும், அவற்றில் ரூபா 5,743,481 தொகை ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 308,622 தொகையினை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாது இருந்தது. | வருடாந்தம் டென்டர் மூலம் வாடகைக்கு கொடுக்கும் ஆதனங்களின் வருமானத்தை அறவீடு செய்ய வேண்டும். | வாகனத் தரிப்பிடத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை ஆகிய ரூபா 308,622 தொகையினை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கான அனைத்து ஆவணங்களும் தற்போது சபையின் சட்டவரைஞருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 390,907 தொகைக்கான திரண்ட நிலுவைத் தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 81,500 தொகை அதாவது 20.84 சதவீதம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன். |

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி செலுத்தும் வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 7854 தொகை எனினும் 2018 ஆம் ஆண்டின் போது வர்த்தக அனுமதிப்பத்திரத்திற்காக பணம் செலுத்தியிருந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் வியாபார வரி செலுத்தியிருந்த வர்த்தக நிலையங் களின் எண்ணிக்கை 3439 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் 4415 வியாபார நிலையங்களினால் வர்த்தக வரி அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாமல் போயுள்ளது. | வர்த்தக அனுமதிப்பத்திரம் அல்லது வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கணிப்பீடு ஒன்றின் மூலம் அப்பிரதேசத்தில் உள்ள உண்மையான வியாபார நிலையங் களின் எண்ணிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது வியாபார நிலையங் களின் எண்ணிக்கை 7854 தொகை என காட்டப்பட்டு ள்ளதாக வருமானப் பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வர்த்தக அனுமதிப்பத்திரக் கணிப்பீட்டின் போது மற்றும் வெளிக்கள பரிசோதனை யின் போது பொருத்தமற்ற இடங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு வழங்குவதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 254,114 தொகை ஆகிய நிலுவை அனுமதிப்பத்திரப் பெறுமதியில் ரூபா 241,109 தொகை அதாவது 94.8 சதவீதம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்திருக்க வில்லை. | நிலுவை வர்த்தக வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.12.31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 254,114 தொகைக் கான நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் படி நிலுவைக் கட்டணம் அறவிடப்பட்டுக் காணப்பட்டது. |
| (இ) | 2013 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 107,825 இற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் பதிவேடுகளில் இருந்து பதிவழிப் பதற்காக 2018 திசெம்பர் 16 திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2019 மே 27 ஆந் திகதி வரை உரிய அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார வரி குறிப்பிட்ட காலப் பகுதியில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டுக்கு முன்னர் அறவிடப்பட வேண்டி இருந்த நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணத்தை பதிவழிப்பதற் காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி சரி செய்யும் படி திருப்பி அனுப்பப் பட்டிருந்தது. குறைபாடு களை சரிசெய்து மீண்டும் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு முறையான அங்கீகாரம் பெறப்பட்டு இருக்காத துடன் 2018 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் தேவைப்படும் காலவரையறை மற்றும் செயலாற்றுகையை தெளிவாக இனங்காண்பதற்கு போதியளவு தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தெளிவாக மற்றும் தேவைப்படும் காலம் உட்பட தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப் பட வேண்டும். | எதிர்காலத்தில் குறைபாடுகள் சரி செய்து கொள்வேன் என அறிவிக்கின்றேன். |

**(ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்த உடன்பட்டிருந்த பெறுமதி ரூபா 2,463,727 தொகைக்கான 10 செயற்திட்டங்களின் வேலைகள் 2019 மே மாதம் 21 திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்கள் குறிப்பிட்ட உடன்படிக்கை காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். | சில செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டதுடன் தாமதமாகிய செயற்திட்டங் களுக்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| (ii) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்த உடன்பட்ட பெறுமதி ரூபா 708,063 தொகைக்கான செயற்திட்டம் ஒன்று இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | உடன்பட்டிருந்த செயற்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். | இரத்து செய்ததற்கான காரணங்கள் காட்டப் பட்டுள்ளன. |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டின் போது வகைப்படுத்தப்பட்ட குப்பைகள் 9,081 தொன்கள் மற்றும் பலவினக் குப்பைகள் 14,140 தொன்கள் கரதியான குப்பை செயற்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மொத்த குப்பையின் எண்ணிக்கையில் வகைப்படுத்தப்பட்ட குப்பை 39.1 சதவீதத்தில் காணப்பட்டது. | குப்பை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பலவினக் குப்பைகள் பெறும் அளவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 ஆண்டின் போது வகைப்படுத் தப்பட்ட குப்பைகளுக்காக ரூபா 2,199,000 தொகை மற்றும் வகைப்படுத்தப்படாத குப்பை களுக்காக ரூபா 13,743,300 தொகை செலவுகளை சபை மேற்கொண்டிருந்த துடன் உரிய முறையில் குப்பை முகாமைத்துவம் செய்யப்படாமை யால் பலவினக் கழிவுப் பொருட்களுக்காக ரூபா 11,544,300 தொகை மிகையாக செலுத்துவதற்கு சபைக்கு நேரிட்டிருந்தது. | குப்பை முகாமைத் துவச் செயற்திட்டம் குறிப்பிட்ட காலப் பகுதியில் செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் பலவினக் குப்பைகளின் அளவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (iii) | கெஸ்பேவ நகர சபை உட்பட 08 உள்ளூராட்சி நிறுவனங்களின் குப்பை அகற்றப்படும் கரதியான கழிவுப்பொருள் செயற்களம் அமைந்துள்ள பூமியில் 80 சதவீத அளவு கெஸ்பேவ நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தான தால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு எதிர்காலத்தில் சுகாதார மற்றும் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்படும் ஆபத்து நிலைமை ஒன்று காணப்படுகின்றது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை அறிவுறுத்த வேண்டும். | தற்போது காணப்படும் ஆபத்து நிலைமை தொடர்பாக எனது இலக்கம் கெநச/5/1/1/2019 மற்றும் 2019.04.25 ஆந் திகதிய மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர் உட்பட பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு ள்ளன என்பதை கருணையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான பழைய வாடிவீட்டை உடைத்து அகற்றி விட்டு ரூபா 52,929,240 இற்கான மதிப்பீட்டின் கீழ் புதிய கட்டிடம் ஒன்றின் முதலாம் கட்டம் நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 04 ஆந் திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் வாடி வீட்டின் மூலம் மீளாய்வாண்டு இறுதி வரை வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. | வருமானம் உழைப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய சபை நியமனம் செய்யப்பட்ட பின்னர் வாடிவீட்டின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்ட துடன் எதிர்வரும் சில மாதங்களில் பூர்த்தி செய்யவுள்ளது. எதிர்காலத்தில் வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹல்பிட பொது மயானத்திற்கான அளவை விடயங்கள் மேற்கொள்ளப் பட்டு காணி வரைபு ஒன்று தயாரிப்பதற்கு 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை சபைக்கு முடியாதிருந்தது. | காணி வரைபொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹல்பிட மயானத்திற்காக தொழிநுட்ப உத்தியோகத் தர்களினால் அளவை விடயங்களுக்காக சென்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தினால் அளவை விடயங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 06 மயானங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி அல்லது சுவர் நிர்மாணிப்பதற்கு 2018 ஆம் ஆண்டு இறுதி வரை நகர சபைக்கு முடியாதிருந்ததுடன் மயானங்களு க்கு உரிய காணிகள் அங்கீகாரம் இன்றி ஆட்களால் அபகரித்தலுக்கு ஆளாகியிருந்தது. | வரைபுகள் மற்றும் கட்டிடங்கள் பிரமாணங் களுக்கு இணங்க சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு உரித்தாக்கு வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது 05 மயானங்களை அளவை செய்வதற்காக கட்டளை கிடைக்கப் பெற்று அளவை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பதவியணி மட்ட 02 பதவிகளும், 04 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் இரண்டாம் மட்டத்தில் ஒரு ஊழியர் மிகையாகவும் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவை அறிவுறுத்தி இருந்ததுடன் ஆரம்ப மட்டத்தில் இயந்திர இயக்குனர் ஒருவரின் வெற்றிடத்தை நிரப்புவதற் காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாமையால் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது. |
| (ஆ) | இந்த ஊழியர்களுக்கு மேலதிகமாக பதவியணி மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளுக்காக அமைய அடிப்படை யில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர் இருவரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரும் மீளாய்வாண்டின் போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கடமையாற்றும் மற்றும் ஒப்பந்த அடிப்படை மீதான உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி சேர்க்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த 48 ஊழியர் களுக்கு சம்பளமாக 2015 முதல் 2018 வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 51,219,350 இற்கான தொகையை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சம்பள மீளளிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியணியில் உட்படுத்தப் பட்ட பின்னர் மாத்திரம் சம்பள மீளளிப்புச் செய்யப்படும். அதற்கு முன்னர் சம்பளம் சபையினால் செலுத்தப்படுகின்றது. |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் களுக்கு மேலதிகமாக சபையின் செயற்திட்டங்களுக்காக சேர்க்கப் பட்டிருந்த 54 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படி என ரூபா 6,474,650 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தொழிலாளர்கள் உட்பட அங்கீகரிக்கப் பட்ட பதவியணியை வருட ஆரம்பத்தில் இனங்கண்டு பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். | குப்பை முகாமைத்துவம் மற்றும் டெங்கு நிகழ்சித் திட்டம் ஆகிய காலத்திற்கான தேவைகளுக்காக உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் மீது இந்த செயற்திட்டத்திற்காக ஆட்சேர்க்கப்பட்டு சபையின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீது ரூபா 34,557,488 தொகையாக இருந்ததுடன் அம் மீதியில் அடங்கியுள்ள 11 உத்தியோகத்தர்களின் 2011 முதல் 2016 வரை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 307,226 இற்கான கடன்மீதிகளில் மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன்காரர் கடனை செலுத்துவதை புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் பிணையாளரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடு செய்யப்பட முடியாத சில மீதிகளை பதிவழிப்பதற் காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2016 மே 09 ஆந் திகதி முதல் செயலாளர் பதவிக்கு மற்றும் 2015 செப்தெம்பர் 16 ஆந் திகதி முதல் இ.தொ.சேவை (விஷேட) பதவிக்கு நீண்ட காலமாக பதில் கடமை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தனர். | நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூன்றாம் மட்டத்தில் பதில் கடமையாற்றும் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்தல் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யும் வரை செயலாளர் மற்றும் இ.தொ.சேவை (விஷேட) பதவிக்காக உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரினால் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 14 மயானங்களில் 13 இன் உரித்து (உரிமை) 2018 திசெம்பர் 31 திகதி வரை நகர சபைக்கு உரித்தாக்கி இருக்கவில்லை. | மயானங்களின் உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். | கெஸ்பேவ நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் 13 மயானங் களில் உரித்து (உரிமை) கெஸ்பேவ பிரதேச செயலாளருக்கு உரித்தாகி இருந்ததுடன் கெஸ்பேவ நகர சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 ஏக்கர் 01 ரூட் 37 பர்சஸ் விசாலமான 34 காணித் துண்டுகளின் தற்போதைய விலாசம் அல்லது தற்போது யாரால் பயன்படுத்தப்படுகின்றது போன்ற விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், 11 ஏக்கர் 3 ரூட் 19 பர்சஸ் விசாலமான 22 காணித் துண்டுகள் ஆக்கபூர்வமான விடயங்களுக்காக பயன்படுத்தப்படாமல் வெறிதான காணிகளாக காணப்பட்டது. | அங்கீகாரமின்றி கைப்பற்றப்படுவதை தவிர்ப்பதற்காக சபைக்குச் சொந்தமான காணிகள் பௌதீக ரீதியாக இனங்காண வேண்டும். | பதில் அனுப்பப்படவில்லை. |
| (ஆ) | கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 74 காணிகளின் தெரிவின் போது 56 காணிகள் அதாவது 75 சதவீதம் ஆக்கபூர்வமான விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டி ருக்கவில்லை. | எதிர்கால அபிவிருத்திக் காக சபைக் காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும். | 74 காணிகளில் சபைக்கு சொந்தமான 08 ஆதனங் களும் 02 பாதைகளும் கிணறொன்றும் அடங்குகின்றது. இதன் பிரகாரம் பொதுக் காணிகள் 63 இல் 40 தொகை இனங்கண்டிருந்ததுடன் மேலும் இனங்காண வேண்டிய 23 காணிகள் தொடர்பாக தகவல்கள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என கருணையுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நீண்ட காலம் முதல் 02 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் பண்டக் கணிப்பீட்டின் போது அப்புறப்படுத்துவதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. |

### 3.4.3 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 25(1) பிரகாரம் சபைக்குச் சொந்தமான 26 வாகனங்களுக்காக 2018 ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வில்லை. | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனங் சட்டத்தின் பிரிவு 25(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 வாகனங்களுக்கான வருமான அனுமதிப் பத்திரத்திற்காக காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான 22 வாகனங் களுக்கான வருமான அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துக் கொள்கிறேன். |
| (ஆ) | சபைக்குக் கிடைத்திருந்த வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 05 வாகனங்களை உரித்தாக்கி இருக்கவில்லை. | உரித்தாக்கல் செய்யப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (இ) | 03 வாகனங்கள் மற்றும் இயந்திரங் கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்க வில்லை. | நிலையான சொத்துக் கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப் படாத வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை உட்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாசகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 464,831 தொகை பெறுமதியான புத்தகங்களின் இருப்பொன்று காணாமல் போன அல்லது அகற்றப்பட்ட புத்தகங்கள் என கணித்து முறையான அங்கீகாரம் இன்றி 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | வாசகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த புத்தகங்களை குறிப்பிட்ட காலப் பகுதியில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகளின் பரிந்துரையின் படி பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம் பெற்று புத்தகங்களை பதிவழிக்கப்பட்டதுடன் உரிய சபை அங்கீகாரம் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். |